**O.S.No. 115/2020 நாள் 13.03.2026 DW 1 – திரு. பெரியராஜ்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (வாதிகள்தரப்பில்)

எனது தாத்தா ஆத்திக்கு எனது பாட்டி ஆழ்வார், எனது தந்தையார் முத்துராஜன், என் அத்தைகளான மூக்கம்மாள், பெரியநாச்சி, செல்வா, தனலெட்சுமி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1முதல் 4 அசல் ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் எல்லாம் எனது தாத்தா பெயரில் உள்ளது என்றும், நான் பிறக்கும் முன்பாகவும், சிறு பிள்ளையாகவும் இருக்கும்போது வாங்கியதாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். என் தாத்தா பெயரில் உள்ள ஆவணங்கள் யார் யாரிடம் பணம் கொடுக்கப்பட்டு, என்ன சூழ்நிலையில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–5, 6 உயில் ஆவணங்கள் எழுதப்பட்ட விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரிதான், என் தாத்தா சொல்லி எனக்கு தெரியும். அந்த உயில் ஆவணங்கள் எங்கு வைத்து யார் யார் பத்திர அலுவலகத்திற்கு போனார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான், என் தாத்தா சொல்லி எனக்கு தெரியும். எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்திற்கு விவரங்கள் சொல்லியது நான்தான் என்றால் சரிதான். எதிர்வழக்குரையிலோ,நிரூபணவாக்குமூலத்திலோ தாத்தா சொல்லிதான் மேற்படி விவரங்கள் தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 1991 ஆம் ஆண்டு. என் தாத்தா, பாட்டிக்கு என் தந்தை மட்டும்தான் ஒரே ஆண்மகன் என்றால் சரிதான். அந்தஅடிப்படையில் என் பாட்டியை பராமரிக்க வேண்டிய கடமை என் தந்தைக்குத்தான் உண்டு என்றால் சரிதான், என்

பாட்டி என் தாயாரை கவனித்து கொள்ளவில்லை என்பதால் நாங்கள் எங்கள் பாட்டியை கவனிக்கவில்லை. என் பாட்டி ஆழ்வார்அம்மாள் என் தாயாரை கவனித்து கொள்ளவில்லை என்பதால் நாங்கள் எங்கள் பாட்டியை கவனிக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ–7 முதல் 21 வரையுள்ள பட்டாக்கள் பி.வா.சாஆ–5,6 உயிலின் அடிப்படையில் மாற்றியதாகத்தான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–7 முதல் 21 வரையுள்ள பட்டாக்கள் 2019 ஆம் ஆண்டிற்கு பின்னால் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–5,6 உயில் ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–5,6 உயில் ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டா மாறுதல் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என் தாத்தா அவர் காலமானபிறகு எனது பாட்டி ஆழ்வார் அம்மாளை பாதுகாத்து பராமரிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்து வைத்துள்ளார்களா என்றால் ஒரு சொத்தை விற்கும்போது பணம் கொடுத்துள்ளோம். இருப்பது அவர் வீட்டில்தான் இருக்கிறார். அவருடைய அன்றாட தேவைகளை நிறைவேற்ற வேண்டி பொறுப்பு ஒரே ஆண்மகன் என்ற முறையில் என் தந்தையாருக்குத்தான் வாரிசுகளுக்குத்தான் உண்டு என்றால் என் தந்தை இறக்கும்போது எனக்கு 10 மாதம், என் அக்காவிற்கு 1 ½ வயது எனது பாட்டி எங்களை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார். அதனால் என் தாத்தா என் பாட்டியை விட்டு வந்து எங்களை பராமரித்தார். மேற்படி விவரங்கள் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பாட்டியின் தேவைகளை அத்தைமார்கள்தான் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை

பராமரிப்பிற்கு கொடுத்துதான் வந்தோம். அதற்குபிறகு கொடுக்கவில்லை. மேற்படி விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் 1வது தபசில் சொத்தில் 2 முதல் 6 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு 1முதல் 4 வாதிகள் எனது தாத்தாவிற்கு பணம் கொடுத்துதான் குடும்ப பெரியவர் என்பதன் அடிப்படையில் எனது தாத்தா பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சட்டப்படியாக 5/6 பாகம் கிடைக்கக்கூடியது என்றுசொன்னால் சரியல்ல. மோசடி உயில் ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளின் பங்கு பாகத்தை மறுக்க எங்களுக்கு உரிமையில்லை என்றுசொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றுசொன்னால் சரியல்ல. வழக்கு விவரங்கள் நேரடியாக தெரியாது என்பதால் நான் பொருத்தமற்ற சாட்சி என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.